**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2016

## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி - I

1. i. பாவத்தின் விளைவுகள் நான்கு தருக.

   ii. நான்கு பாரம்பரியங்களும் தோற்றம் பெற்ற காலங்களைக் குறிப்பிட்டு, அப்பாரம்பரியம் ஒன்றினது அமைப்பு முறை பற்றி நான்கு அம்சங்கள் தருக.

   iii. உண்மையான இறைவாக்கினர் ஒருவரை இனங்காண்பதற்கான அளவுகோல்கள் நான்கு தருக.

   iv. இஸ்ரயேல் மக்கள் மத்தியில் காணப்பட்ட சமூகப்பிரிவுகள் நான்கினைப் பெயரிடுக.

   v. கலிலேயாவை அண்மித்துள்ள பிரதேசங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் நான்கு தருக.

2. i. நற்செய்தி எழுத்து வடிவம் பெற வேண்டிய தேவைகள் நான்கு தருக.

   ii. சமநோக்கு நற்செய்தி பிரச்சனை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுகள் நான்கு தருக.

   iii. திருமணவிருந்து, வலை ஆகிய உவமைகளினூடாக முன்வைக்கப்படும் படிப்பினைகள் இவ்விரண்டு தருக.

   iv. உயிர்த்த இயேசுவின் தரிசனங்கள் இவ்விரண்டு வீதம் மாற்கு, யோவான் நற்செய்தியிலிருந்து வெவ்வேறாகத் தருக.

   v. இறைவனிடம் வேண்டக் கற்றுக் கொடுத்தல், இயேசுவின் வேண்டல் ஆகிய இரண்டிற்குமிடையே காணப்படும் சமனான பண்புகள் நான்கு தருக.

3. i. பொலிபோனி சங்கீத முறையில் இன்றைய திருப்பலியில் பயன்படுத்தப்படும் பகுதிகள் நான்கு தருக.

   ii. மோசேயிக் சித்திரக்கலையின் பண்புகள் நான்கு தருக.

   iii. அயிக்கோன் உருவங்களின் பண்புகள் நான்கு தருக.

   iv. போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் பணியாற்றிய துறவறசபைகள் நான்கைப் பெயரிடுக.

   v. போர்த்துக்கேயரின் ஆட்சி சுவையற்றுப் போவதற்கான காரணங்கள் நான்கு தருக.

## பகுதி - II

4. i. ஆதிப்பெற்றோரின் பாவம் தொடர்ந்து மனுக்குலத்தைப் பாதித்தது என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

   ii. மோசேயின் தலைமைத்துவ பண்புகளிலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகாட்டல்களை 20 வரிகளில் விளக்குக.

5. i. எசாயா இறைவாக்கினரின் மெசியா பற்றிய போதனைகளில் மெசியாவின் சிறப்புப் பண்புகளையும், அவரது ஆட்சிக் கால சிறப்புக்களையும் தொகுத்து விளக்குக.

   ii. இன்றைய கால கட்டத்தில் இறைவாக்கினர்களின் போதனைகள் மூலம் எமக்குக் கிட்டும் வழிகாட்டல்களை விளக்குக.

6. i. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த பவுலின் படிப்பினைகளை விளக்குக.

   ii. திருத்தூதர் பவுலின் படிப்பினைகள் சிறப்பாய் அமைந்தமைக்கு அவரிடம் காணப்பட்ட ஆளுமைப் பண்புகளை ஐந்து விடயங்கள் மூலம் விளக்குக

7. i. ஒல்லாந்தர் காலத்திலே கல்வி பற்றிய முக்கிய விடயங்களை விளக்குக.

   ii. இன்றைய திருச்சபையின் மனித நேயப்பணிகளை உதாரணங்கள் மூலம் விளக்குக.

8. i. திரிதெந்தின் பொதுச்சங்க மறுமலர்ச்சித்திட்டங்களை விளக்குக.

   ii. இக்காலத்தில் தோற்றம் பெற்ற சபைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒரு சபையின் தோற்றம், பணி பற்றி விபரிக்குக.

The National e-Learning Portal for The General Education